1980 ஜூலை 30]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இதனைக் கண்டுபிடித்த போலீஸ் ஸ்டேஷனையே தாக்கி இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் இதுபற்றிக் கூறி இருக்கிறார் என்று தெரிந்தால் ஹாஸ்டலும் தாக்கப்படும். அதனால் எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படுமா? கொருக்குப் பேட்டையில் இந்தத் திருட்டுக்கொள்ளை நடக்கின்றது. மேலும் கொருக்குப்பேட்டை சாராயக் கலவரம் ஏற்பட்ட பகுதி. கொருக்குப்பேட்டையில் நான்கு நாட்கள் தொடர் கலவரம் போன்ற நிலைகள் எல்லாம் இருப்பதன் காரணத்தால் அந்த கொருக்குப்பேட்டையை கலவரப் பகுதியாக அரசு அறிவிக்க முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட உண்மைகளை அரசுக்குக் கொண்டு வந்து தருவதன்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஆபத்து ஏற்படுமோ என்று அச்சப்படுகிறார்கள். ஆகவே எங்கெங்கே அப்படிப்பட்ட பாதுகாப்புக்களைத் தரவேண்டுமோ அப்படிப்பட்ட பாதுகாப்புக்களைத் தருகின்ற வகையில் காவல் துறையினர் ஈடுபடுவார்கள். அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சரவர்களும் எடுத்துக்கொள்வார்கள். ஆகவே அச்சம் இல்லாமல் அந்தப் பணியிலே ஈடுபடவேண்டும். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கெங்கு பாதுகாப்பு வேண்டும் என்று குறிப்பிடுகிறார்களோ அதையும் ஆராய்ந்து எங்கெங்கே பாதுகாப்பு தேவைப்படுகிறதோ அந்த இடத்தில் பாதுகாப்பைத் தருவதற்கு அரசு முயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கலசப்பாக்கம் தொகுதி, சாணார்பாளையத்தில் அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் சேதம் அடைந்துள்ளது.

*திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, வடஆற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சாணார்பாளையம் அரசினர் உயர்நிலைப் பள்ளி சுழற்காற்றில் சேதமடைந்தது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, இவ்வாண்டு ஜூன் திங்களின் கடைசி வாரத்தில் அடித்த பெருங்காற்றினால் இப்பள்ளியில் கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படாவண்ணம் வேறு சில மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுப்பணித்துறை அதிகாரிகள் இவ்விடத்தை உடனடியாகப் பார்வையிட்டு கட்டிடத்தைச் சீர் செய்வதற்கு திட்ட மதிப்பீடுகள் தயாரித்து வருகிறார்கள்.

திரு. பெ.சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மே மாதம் 28ஆம் தேதியன்று அடித்த சுழற் காற்றிலே அந்தப் பள்ளியில் இருந்த நிரந்தர கட்டிடமும், இரண்டு கொட்டகைகளும் விழுந்து விட்டன. இன்றுவரை அங்கே எந்தவிதமான மாற்று ஏற்பாடும் செய்யப் பெறாத நிலையில், 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மரத்தடியில் இருந்துதான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் நிரந்தர ஏற்பாடு ஒன்றை அவர்களுக்குச் செய்யவும் அதற்கிடையில் தற்காலிக முறையில் விழுந்த கொட்டகைகளை புதுப்பித்துத் தரவும் ஏற்பாடு செய்ய முன் வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையினர் அதற்கான மதிப்பீட்டைத் தயாரித்து அனுப்புவார்களேயானால் அரசு அதில் மேற்கொண்டு நடவடிக்கையை விரைவாக எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, நிரந்தர கட்டிடத்திற்குத்தான் அவர்கள் மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்ப முடியும். ஆனால் அது தவிர தாற்காலிக கொட்டகைகள் இரண்டு விழுந்துவிட்டன. வகுப்புகள் பெரும்பாலும் அங்கேதான் நடைபெற்றன. ஆகவே அந்தக் கொட்டகைகளைத் திரும்ப அமைக்க ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டபோது, கல்வி அதிகாரிகளுக்கு இப்படிப்பட்ட காலங்களில் தனியாக நிதி ஒதுக்கீடு அதிகமாக செய்யும் வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தால், நாங்கள் எடுத்து இந்த வகையில் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர்

1980 ஜூலை 30] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அவர்கள் அங்கே அந்த தற்காலிக கொட்டகைகளையாவது உடனடியாக கட்டித்தரும்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எடுக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது பற்றி அரசு உடனடியாகக் கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைபடுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப் படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : இச்சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.